(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 111.]

# பாராளுமன்றம்

# ஒழுங்குப் பத்திரம்

## 2011, ஓகத்து 09, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0508/ ’10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— மரபார்ந்த கைத்தொழில்கள். சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் கிராமியக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் பின்பற்றும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) அதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) கிராமியக் கைத்தொழில்கள் முறைமையைப் பலப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0905/ ’10

2.

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ்) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சின் செயலாளரது ED/2/29/4/1/46 ஆம் இலக்க 2005.07.19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005.07.28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0931/ ’10

3.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தென் மாகாணத்தின் பாடசாலைகளில் தற்போது சுமார் பத்து வருட காலமாக தொண்டர் அடிப்படையில் கடமையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் சிலர் எவ்விதமான கொடுப்பனவையும் பெறாது கடமையாற்றுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கை, கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் எத்தகைய பாடங்களை கற்பிப்பதற்காக ஆட்சேர்க்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நாட்டின் வேறு மாகாணங்களில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனில், தென் மாகாணத்தின் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0960/ ’10

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் உபயோகத்திலுள்ள தொலைபேசி வலையமைப்புகளினூடாக மேற்கொள்ளப்படும் உரையாடல்களை செவிமடுப்பதற்கு அல்லது பதிவு செய்வதற்கான உபகரணத்தொகுதியொன்றை அரசு அல்லது ஏதாவதொரு நிறுவனம் இந்நாட்டிற்கு கொண்டு வந்து அல்லது நிறுவி உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) குறித்த உபகரணத்தொகுதியினால் உள்வாங்கப்படும் தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறான உபகரணத்தொகுதியொன்றைக் கொண்டு வந்துள்ளதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1229/ ’11

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ‘தயட்ட கிருல’ கண்காட்சிக்காக மீள்குடியேற்ற அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1302/ '11

6.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை வங்கிக்குச் சொந்தமான 65-1990, 32-7394, 32-7393 மற்றும் 65-1986 ஆம் இலக்கங்களையுடைய நான்கு வாகனங்கள், ஒரு வாகனத்திற்கு மாதாந்தம் ரூபா.25000/ - வீத வாடகை அடிப்படையில் நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களுக்கு ஏற்புடைய வாடகைத் தொகை 2009.10.09 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை நிதி அமைச்சினால் இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விபத்திற்குள்ளாகியுள்ள 65-1986 ஆம் இலக்க வாகனத்திற்கான இழப்பீட்டுத் தொகை இலங்கை வங்கிக்குச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 65-1990 மற்றும் 32-7393 ஆம் இலக்க வாகனங்கள் இரண்டினையும் மீண்டும் இலங்கை வங்கியிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதயும்;

(ii) அவ்வாறாயின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0751/ '10

7.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களின் கீழ் ஆசிரிய இடமாற்ற சபையொன்றினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரிய இடமாற்றக் கொள்கையொன்று இருந்தது என்பதையும்,

(ii) மேற்படி ஆசிரியர் இடமாற்ற சபையானது, கல்வி அபிவிருத்தி மேலதிக செயலாளரின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவரின் கீழ் இயங்கி வந்தது என்பதையும்,

(iii) தற்போது, ஆசிரியர் இடமாற்றப் பிரிவானது, ஆசிரிய தாபனப் பிரிவின் மேலதிக செயலாளரின் கீழ் இயங்குகின்றது என்பதையும்,

(iv) இதுவரை இது தொடர்பில் பணிப்பாளரொருவர் நியமிக்கப்படவில்லை என்பதையும்,

(v) மத்திய அமைச்சின் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையினை நடைமுறைப்படுத்தத் தேவையான உத்தியோகத்தர் கட்டமைப்பு அமைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆசிரியர் இடமாற்ற சபையின் உத்தியோகத்தர் கட்டமைப்பை அமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்வதற்கான ஒழுங்கான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுமா என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0956/ '10

8.

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின், மாத்தறை பம்புரண, சுமணசார மாவத்தை 35 B இலக்கத்தில் வசிக்கும் திருமதி சாந்தி பிரேமரத்ன சவூதி அராபியில் வேலை வாய்ப்புக்காக 2007.11.19 ஆம் திகதியன்று வெளிநாட்டுக்குச் சென்றுள்ளாரென்பதையும்;

(ii) தற்போது மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள போதிலும், இவரைப் பற்றிய எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக இவரது கணவரான திரு. சுசில் பிரேமரத்ன மாத்தறையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைபாடு செய்துள்ள போதிலும் அதற்கு இற்றை வரை எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) திருமதி சாந்தி பிரேமரத்ன பற்றி தேடிப் பார்த்து அவரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல் ஏன் ?

1041/ '10

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உலக வங்கி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் கிராமிய மட்ட சமூக நீர்ப்பாசனக் கருத்திட்டத்துக்குக் கிடைத்த உதவித் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நிறைவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை வேலைகள் நிறைவு செய்யப்படாதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வாறு வேலைகள் நிறைவு செய்யப்படாதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) கிராமிய மட்ட சமூக நீர்ப்பாசனத் திட்டம் முடிவடையும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1230/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1304/ '11

11.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 சனவரி மாதம் 02ஆம் திகதி முதல் திசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் இலங்கை வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேலேயுள்ளவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்களின் பெயர்களும் விலாசங்களும் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0752/ '10

12\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதமளவில் கட்டாயப் பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்துள்ள கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி டிப்ளோமாதாரிகளுக்கு இதுவரை ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்,

(ii) அவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இதுவரை அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0957/ '10

13\.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் கொடமக சந்தியிலிருந்து வெல்தொட்ட வரையிலான வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையின் காரணத்தால் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதி எந்த நிறுவனத்திற்கு சொந்தமானதென்பதையும்,

(ii) இவ்வீதியை போக்குவரத்திற்கு பொருத்தமான விதத்தில் திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், இப்பணிகளை எப்போது ஆரம்பித்து எப்போது பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாதையை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இப்பணத்தொகை ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1042/ '10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வங்கியை தாபிப்பதற்காக அரசாங்கம் முதலீடு செய்த தொகை எத்தனை மில்லியன்களென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2010 திசெம்பர் வரையிலான காலப் பகுதியில் மேற்படி வங்கியினால் வழங்கப்பட்டுள்ள ரூபா 5 மில்லியன்களுக்கு அதிகமான கடன்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கடன்களைப் பெற்றுக்கொண்ட நபர்கள் மற்றும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) கடன்களப் பெற்றுக்கொண்ட நபர்களில் அல்லது கம்பனிகளில் செயலாற்றாத அல்லது செயற்படுத்தப்படாத (non-performing) கடன்களின் எண்ணிக்கை, நபர்கள் மற்றும் நிறுவனங்கள் ரீதியிலாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி வங்கியின் மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான செயலாற்றாக் கடன்களின் சதவீதம் யாதென்பதையும்;

(v) 2010 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய வங்கிகளில் செயலாற்றாக் கடன்களின் சதவீதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1231/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கை இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ எம்.எஸ் தௌபீக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"காசிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2011 யூலை மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சாரால் மின்சக்தி மற்றும் மின்வலு என்ற விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதிய 1703/46 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1964 ஒற்றோபர் 1 ஆம் திகதிய 14186 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் (v) ஆம் பகுதியை திருத்தஞ் செய்து அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிய 1712/21 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 6.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் கீழ், நிதி திட்டமிடல் அமைச்சரினால், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 1703/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதிய 1702/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மே மாதம் 16 ஆம் திகதிய 1706/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரவின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மார்ச்சு மாதம் 04 ஆந் திகதிய 1695/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிய 1701/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

23.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

24.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாச்சார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

தேசமான்ய ரவீந்திர வணிகசேகர ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

இலங்கை ஔடதங்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஜோன் செனவிரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

அங்கவீனர்களுக்கான ஆலோசனை உதவிகளையும் வழங்குவதற்கான திதொரா தியேட்டர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.